**OS No.50/2025**

PW 1 - முனியாண்டி

நாள் 02.07.2026

**வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை 1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

என் தகப்பனார் அய்யாக்கண்ணு சேர்வைக்கு மொத்தம் மூன்று மக்கள் 2 ஆண் மக்கள் மற்றும் 1 பெண் மக்கள் ஆவார்கள். என் சகோதரர் பெயர் பாண்டி ஆகும். சகோதரி பெயர் மாரியம்மாள் ஆகும்.

என் சகோதரி மாரியம்மாள் இறந்து மூன்று வருடங்கள் ஆகின்றது. என் தகப்பனார் அய்யாக்கண்ணு 2000 ம் ஆண்டில் இறந்தார். என்தகப்பார் இறந்த காலகட்டத்தில் நான் சென்னையில் தான் இருந்தேன்.

வா.சா.ஆ 1 ஆவணம் ஏற்பட்ட காலத்தில் எனக்கு நான்கு வயதிருக்கும். வா.சா.ஆ 1 ஆவணத்தை எழுதிக்கொடுத்த லெட்சுமிஅம்மாள் என்பவரை எனக்குத் தெரியாது. வா.சா.ஆ 1 ஆவணத்தில் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

என் குடும்பத்தில் ராமசாமி, பூமிநாதன் என்று யாரும் கிடையாது. வா.சா.ஆ 1 ஆவணத்தைப் பற்றி எப்போது தெரிந்து கொண்டீர்கள் என்று கேட்டால் 10 வருடத்தில் தான் தெரிந்து கொண்டேன்.

வா.சா.ஆ 1 ஆவணத்தைப் பற்றி என் தகப்பனாரோ என் சகோதரரோ சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்று கேட்டால் சர்வே எண் 472/30 ஆகும்.

சர்வே எண் 472/30 க்கு வடக்கே சர்வே எண் 472/31 சொத்து உள்ளது. மேற்படி சர்வே எண் 472/31 சொத்திற்கு பட்டா எண்

பெயரில் இல்லை. நான் சொல்லக்கூடிய சொத்திற்கு கிரயப்பத்திரம் உள்ளது. கண்ணையா என்பவரிடம் இருந்து என் தகப்பனார் 1961 ல் கிரயம் வாங்கினார்.

அந்த கிரயப்பத்திரம் என் கைவசம் இருக்கிறது. வா.சா.ஆ 1 ஆவணத்தில் வடக்கு மாலாக என் தகப்பனார் கிரயமனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த பத்திரத்தில் கிழமேல் 32 என்றும் தென்வடல் 22 அடி என்று குறிப்பிட்டு எழுதிக்கொடுத்துள்ளார். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தான் நீங்கள் சொல்லக்கூடிய அடி அளவுகள் உண்மையானது என்று தெரியவரும் என்றால் சரிதான்.

சர்வே எண் 472/32 க்கு வடக்கே தான் சர்வே எண் 472/31 உள்ளது. சர்வே எண் 472/31 ல் ஒன்றரை ஆண்டிற்கு முன்பு வீடுகட்டியுள்ளேன். அதற்கு முன்பு என் தகப்பனார் காலத்தில் அங்கு கூரை வீடு இருந்தது.

அந்த கூரை வீடு பாழடைந்து போனதால் நான் வேறு வீடு கட்டினேன். எனக்கு மொத்த மூன்று பிள்ளைகள் அதில் கார்த்திக் என்பவரும் ஒருவர் என்றால் சரிதான். சர்வே எண் 472/31 ஐ பொறுத்தவரை என் மகன் கார்த்திக்கு ஒரு செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளேன் என்றால் சரிதான்.

மேற்படி செட்டில்மெண்ட் 05.06.2023 ல் எழுதிக்கொடுத்தேன். அந்த இனாம் செட்டில்மெண்ட் **பி.வா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு பின்பு தான் வீடு கட்டப்பட்டது. செட்டில் மெண்ட் ஆவணத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் சரியாகத் தான் உள்ளதா என்றால் சரியாகத் தான்

உள்ளது.

செட்டில்மெண்ட் ஆவணத்தில் புல எண் 472/31 க்கு உரிய நத்தம் நில உடைமைப் பட்டா என் பெயரில் உள்ளதாக பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் உள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியவில்லை.

புல எண் 472/31 க்கு என் பெயரில் பட்டா இல்லை என்றால் சரிதான். பட்டா வாங்குவதற்கு முயற்சி செய்து வருகிறேன். என் மகன் கார்த்திக்கு நான் எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் புல எண் 472/31 க்கு உரிய பட்டா காட்டப்பட்டு இருந்தால் அது தவறாகும்.

புல எண் 472/30 க்கு கிழ்புறம் தென்வடல் ரோடு உள்ளது. மேல்புறம் கோவிந்தன் என்பவர் வீடு உள்ளது. புல எண் 472/30 க்கு தென்புறம் ரோடு உள்ளது. அந்த ரோட்டிற்கு கீழ்புறம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட ஓட்டுசார்ப் உள்ளது.

1 ம் பிரதிவாதி முனிஸ்வரன் அப்பா பெயர் சந்திரன் ஆகும். 1 ம் பிரவாதி முனிஸ்வரனின் தாயார் வள்ளி வழக்கில் இரண்டாவது பிரதிவாதியாக உள்ளார். முனிஸ்வரனின் அப்பா சந்திரனின் அப்பா பெயர் தனிஸ்கோடி ஆகும்.

புல எண் 472/30 சொத்தை நாங்கள் அனுபவித்து வந்தோம் என்பதைக் காட்டுவதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் கிடையாது.

கிரயம் எழுதிக்கொடுத்ததாக சொல்லக்கூடிய லெட்சுமிஅம்மாள் கைரேகை மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. வா.சா.ஆ 1 ஆவணத்தில் புல எண் 472/30 சொத்தின் எப்பகுதியும் சேரக்கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

என் தகப்பனார் அய்யாக்கண்ணு சேர்வைக்கு பாத்தியப்பட்டை சொத்தைப் பொறுத்து எங்கள் குடும்பத்தில் எந்த பாகமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். என் சகோதரி மாரியம்மாள் எனக்கு எந்த ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை.

புல எண் 472/30 ன் மொத்த விஸ்தீரணம் என்னவென்று கேட்டால் கிழமேல் 26 அடியும் தென்வடல் 32 அடியும் ஆகும். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் புல எண் 472/30 மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன்.

நான் தாக்கல் செய்துள்ள பிராதில் சர்வே எண் 472/30 ன் விஸ்தீரணம் 0.005.0 சதுர மீட்டர் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னால் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ 3 ஆவணத்தில் புல எண் 472/30 ன் விஸ்தீரணம் 0.00.66 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மொத்த இடம் குறிப்பிடப்பட்டுள்ளது.

நான் வாங்கிய கிரயப்பத்திரத்தில் காலடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. காலடி என்பது 9 – 10 இஞ்ச் வரும். நான் சொல்லக்கூடிய வா.சா.ஆ 1 ஆவணம் புல எண் 472/31 க்கு உரியது புல எண் 472/30 க்கு சம்பந்தப்பட்டது அல்ல என்றால் சரியல்ல.

வா.சா.ஆ 1 ஆவணத்தில் தெற்குமாலாக சந்திரன் வீடு என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த பத்திரத்தில் கண்டுள்ள சந்திரன் ராமச்சந்திரன் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

புல எண் 472/30 மொத்த சொத்தும் ஆதியில் இந்த ராமச்சந்திரன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அந்த

ராமச்சந்திரனிடம் வாதியின் தாத்தா தனிஸ்கோடி கிரயம் பெறப்பட்டு புல எண் 472/30 சொத்து தனிஸ்கோடியால் அனுபவம் செய்யப்பட்டு வந்தது என்றால் சரியல்ல.

அதனால் தான் நத்தம் நிலவரித்திட்டத்திற்கு முன்பு ஏற்பட்ட காலத்திலேயே புல எண் 472/30 க்கு வாதியின் தாத்தா பெயரில் பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல.

என் தகப்பனாரின் தகப்பனார் பெயர் வேட்டப்பன் ஆகும். என் தகப்பனாருக்கு புல எண் 472/31 தான் அனுபவத்தில் உள்ளது என்று வருவாய்த்துறை ஆவணத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

தாவா மொத்த சொத்தையும் தனிஸ்கோடி தனது மகன் சந்திரனுக்கு விட்டுக்கொடுத்து சந்திரன் காலமான பின்பு அவரது மனைவியும், மகனும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

புல எண் 472/30 ல் ஒரு கழிவறை கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது போக மாட்டுக்கொட்டகை உள்ளது என்றால் சரிதான். இவைகள் முனிஸ்வரனின் தகப்பனார் சந்திரன் காலத்தில் கட்டப்பட்டது. அவர் காலமான பின்பு தான் 1,2 பிரதிவாதிகள் அனுபவம் செய்துவருகிறார்கள்.

அந்த அனுபவத்தின் அடிப்படையில் 1,2 பிரதிவாதிகள் வருவாய்துறையில் பட்டா கோரி நடவடிக்கை செய்து அதன் அடிப்படையில் 1 ம் பிரதிவாதி பெயருக்கு அரசால் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

மேற்படி பட்டா ஏற்பட்ட விபரம் தெரிந்து தவறான

முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. புல எண் 472/30 சொத்தில் நீங்கள் குறிப்பிட்டுள்ள அடி அளவுகளும் எனது பாத்தியம் மற்றும் அனுபவமும் கிடையாது என்றால் சரியல்ல.

தாவா சொத்தைப் பொறுத்து நீங்கள் கேட்கக்கூடிய பரிகாரங்கள் உங்களுக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.**

**–Sd–**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**–Sd–**
**District Munsif,**
**Manamadurai.**